[1981 மார்ச் 30]

தான் ஆகவேண்டும். ஆகவே இரண்டிலே எது சாத்தியம் என்பதைப் பார்த்து அதில் ஏதாவது ஒன்றை செய்து நீர்ப் பிடிப்பினுடைய பரப்பளவு கொள்ளளவு முதலியவற்றை அதிகப் படுத்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

மொடக்குறிச்சி தொகுதியில் சர்க்கரை ஆலை.

* வினா எண். 558.—திரு ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பெரியார் மாவட்டம் மொடக்குறிச்சித் தொகுதியில் சர்க்கரை ஆலை அமைத்திட அரசிடம் திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, காலிங்கராயன், கீழ்பவானி ஆறுகள் பாய்கிற கார ணத்தால் ஏராளமாக கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. அருகில் கரும்பு ஆலை இல்லாத காரணத்தால் கரும்பு எடுத்துச் செல்வ தற்கு அதிகமான லாரி வாடகை கொடுக்க வேண்டியிருக்கிறது. விவசாயிகளின் இந்த துயரை நீக்குகிற வகையில் அங்கு மையமாக ஒரு இடத்தில் சர்க்கரை ஆலை ஒன்றை அமைத்திட இந்த ஆண்டாவது அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற உத்தேசமில்லை.

சுப்புலாபுரம் கிராம கோபால்சாமி மலையில் மேற்கொண்ட ஆய்வு.

* வினா எண். 559— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், கல்லுப் பட்டி பிர்க்கா, சுப்புலாபுரம் கிராமம் கோபால்சாமி மலையை "தமிழ்நாடு கனிம நிறுவனம்" ஆய்வு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் மேற்படி மலையில் கிடைக்கும் வெள்ளைக் கல் எதற்காக பயன்படுத்தப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :

(அ) இல்லை. தமிழ்நாடு கனிம நிறுவனம் கனிமங்களை வெட்டி எடுத்து பயன்படுத்தும் அமைப்பு மட்டுமே ஆகும்.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, இந்த கோபால்சாமி மலைப்பகுதியில ஒரு வெள்ளைக்கல் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதிகாரிகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தவறான குறிப்பை கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், பத்தம்பள்ளி, வாழவந்தான்புரம் பகுதியில் சுமார் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் வெள்ளைக்கல் கிடைத்துக் கொண்டிருக்கிறது. தனியார்களே பாக்டரி வைத்து இதை எடுத்துப் போய் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு அரசின் அனுமதியைப் பெறவில்லை. ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரி பக்கத்திலே இருக்கிறது. அதற்கு இந்த வெள்ளைக்கல் பயன்படும் வகையில் உபயோகிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்தைக் கவனத்தில் கொண்டு பரிசீலிக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோபால்சாமி மலைக்குப் பக்கத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை இருக்கிறது. இங்கே கனிவளங்கள் அதிக அளவில் இருக்கிறது. இதுவரை 35 வருடகாலமாக அரசு அதிகாரிகள் ஆய்வு செய்யவில்லை. ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** **

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, அரசு அதிகாரிகள் விரைவில் அங்கே ஆய்வு நடத்தி அந்த கனி வளங்களை கைப்பற்ற அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : ** **

** (மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது).

1981 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** சம்பந்தப்பட்ட அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ** ** நான் சொன்னது உட்பட அனைத்தும் நீக்கப்படுகிறது.

எட்டயபுரத்தில் கூட்டுறவு நூற்பாலை நிறுவும் திட்டம்.—

* வினா எண். 560—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்தில் கவி சுப்பிரமணிய பாரதியார் பெயரில் பாரதி கூட்டுறவு நூற்பாலை ஒன்று நிறுவ தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) (ஆ) திருநெல்வேலி பேட்டையிலுள்ள தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை எட்டயபுரத்தில் ஒரு கிளை நூற்பாலை நிறுவ உத்தேசித்துள்ளது.

இந்த கிளை ஆலையில் 12,000 கதிர்கள் நிறுவப்பட்டு செயற்கை நூல் இழைகள் உற்பத்தி செய்யப்படும். இதற்கு ஆகும் மூலதனச் செலவு ரூபாய் மூன்று கோடி. சுமார் 400 நபர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சென்ற மானியக் கோரிக்கையின் போது தெரிவித்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டு எட்டயபுரத்திலே கூட்டுறவு நூற்பாலையை அமைப்பதற்காக அரசுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவுத் நூற்பாலைக்கு பாரதியார் பெயர் வைக்க வேண்டுமென்று அரசு ஏதாவது முடிவு எடுத்திருக்கிறதா? அந்த ஆலை எப்போது செயல்படும் என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பாலையின் கட்டுமானப் பணிகள் அடுத்த ஆண்டிலே துவங்கப்படும். யாருடைய பெயரையும் கூட்டுறவு நூற்பாலைக்கு வைப்பதில்லை, கூட்டுறவு நூற்பாலை என்ற

** மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.